# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:02** | **தேதி:15.10.2014**

## NOKIA ஆலை மூடப்படுவதை எதிர்த்து ஆர்ப்பாட்டம்- தமிழ் மாநில மாநாடு அறைகூவல்

அன்பார்ந்த தோழர்களே,

சென்னை ஸ்ரீபெரும்புதூர் அருகில் செயல்பட்டு வந்த NOKIA நிறுவனம் 9 மாதங்களுக்கு முன்பு விருப்ப ஓய்வு திட்டத்தை அறிவித்ததின் காரணமாக அதில் பணியாற்றி வந்த 6600 தொழிலாளர்களில் 5700 தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டனர். தற்போது அங்கு 900 ஊழியர்கள் மட்டுமே பணியாற்றி வருகின்றனர். தற்போது அந்த நிறுவனம் ஒட்டு மொத்தமாக மூடப்படும் என NOKIA நிறுவனம் அறிவித்துள்ளது. இதன் காரணமாக அவர்களின் வாழ்க்கை ஒட்டு மொத்தமாக சீர்குலையும் நிலை ஏற்பட்டுள்ளது.

அக்டோபர் 11முதல் 13 வரை நடைபெற்ற BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில மாநாடு NOKIA நிறுவனத்தின் மூடலை கண்டித்தும் 42 நாட்களாக தொடர்ச்சியாக போராடி வரும் NLC நிறுவனத்தின் ஒப்பந்த ஊழியர்களுக்கு ஆதரவாகவும் 16.10.2014 அன்று அனைத்து கிளைகளிலும் ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் என அறைகூவல் விடுத்துள்ளது.

**எனவே தொடர்ச்சியாக ஜனநாயக முறையில் போராடி வரும் ஒப்பந்த ஊழியர்களின் பிரச்சனைகளை தமிழக அரசும், NLC நிர்வாகமும் முறையாக பேசி தீர்வு காணப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தும், NOKIA ஆலை மூடலை கண்டித்தும் 16.10.2014 அன்று தமிழகம் முழுவதும் சக்தியான ஆர்ப்பாட்டத்தை நடத்திட வேண்டும் என தோழமையுடன் கேட்டுக் கொள்கிறோம்.**

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்.)**
**மாநில செயலாளர்.**